பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 06 2026 THURSDAY 6 45 AM

## வணக்கம் - மாநில செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. உலகில், யோக கலை மிகவும் பிரபலமாகி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிரிக்ஸ் நாடுகளின் கலாச்சார பணிக்குழுவின் இரண்டாவது கூட்டம் வாரணாசியில் இன்று தொடங்குகிறது

3. தமிழகத்தில் மக்களிடையே நல்லிணக்கம், சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை பாதுகாக்கும் நோக்கில் மாநில அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் திரு. ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் கோடை விடுமுறை முடிவடைந்து, பள்ளிகள் இன்று மீண்டும் திறக்கப்படுகின்றன.

5. தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - பூட்டானை வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<

உலகில், யோக கலை மிகவும் பிரபலமாகி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், குஜராத் மாநிலம், அஹமதாபாதில் இன்று தொடங்கவுள்ள முதலாவது உலக யோகாசன விளையாட்டு சாம்பியன் போட்டியில், தாம் காணொலி வாயிலாக கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது, உலகில் உள்ள யோகா ஆர்வலர்களை ஒருங்கிணைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

யோகாசனத்திற்கான உலகளாவிய விளையாட்டுப் போட்டியில், இது குறிப்பிடத்தக்க மைல் கல் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியை ஏற்பாடு செய்தவர்களுக்கும், பங்கேற்பவர்களுக்கும் தாம் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

பிரிக்ஸ் நாடுகளின் கலாச்சார பணிக்குழுவின் இரண்டாவது கூட்டம் வாரணாசியில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சீனா, பிரேஸில், எகிப்து, எத்தியோப்பியோ, இந்தோனேஷியா உள்ளிட்ட 11 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன் பல்வேறு நாடுகளின் தூதர்கள், கலாச்சார நிபுணர்கள் உள்ளிட்டோரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு இடையே சிறப்பு கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில், வாரணாசியின் உலகப் புகழ்பெற்ற பொருட்கள் மற்றும் ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு பொருட்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்படுகிறது.

வாரணாசியின் கைவினை பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையிலான 6 பொருட்கள் இக்கண்காட்சியில் இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சியின் மூலம் வெளிநாட்டு பிரதிநிதிகள் இப்பொருட்கள் குறித்து அறிந்து கொள்வதோடு மட்டுமின்றி, வாரணாசியின் உள்ளூர் கலைஞர்களும், சர்வதேச சந்தையில்

தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<

தமிழகத்தில் மக்களிடையே நல்லிணக்கம், சட்டம் ஒழுங்கு, மகளிர் நலன் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் நோக்கில் மாநில அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

தென்காசியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் விரும்பிய மாற்றத்தின் அடிப்படையில் தற்போதைய அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

நாளை, முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளதாக குறிப்பிட்ட அவர், அதில் சட்டப்பேரவை கூட்டத்தொடர், பட்ஜெட் கூட்டத்தொடர் மற்றும் மக்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கு குறித்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் திரு. ஷாஜஹான், குற்றப் பின்னணி கொண்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>>>>><<<<<<

விதிகளை மீறி செயல்படும் சாயத் தொழிற்சாலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் எச்சரித்துள்ளார்.

ஈரோட்டில் சாயத் தொழிற்சாலைகள், கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யாமல், நீர்நிலைகளில் வெளியேற்றுவதாக புகார்கள் வந்த நிலையில், அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மாசு கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட அவர், சாய தொழிற்சாலைகளில் இயங்கி வரும் சுத்திகரிப்பு நிலையங்கள், அவை செயல்படும் முறைகள், கழிவுகளை சேமிக்கும் வழிமுறைகள் குறித்து கேட்டறிந்தார்.

முறைகேடாக கழிவு நீரை வெளியேற்றி, நீர்நிலைகளை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

>>>>>>><<<<<<

தமிழக சட்டத்துறை செயலாளராக திருமதி. சுமதி நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டத்துறை செயலாளராக பணியாற்றி வந்த திரு. ஜார்ஜ் அலெக்சாண்டர் பணியிலிருந்து ஓய்வு பெற்றதை அடுத்து, அவர் இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மாநில சட்ட ஆணையத்தின் முழுநேர உறுப்பினர் செயலாளராக பணியாற்றி வந்த திருமதி. சுமதி, சட்டத்துறையின் முதலாவது பெண் செயலாளர் ஆவார் என்று மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

தமிழகத்தில் கோடை விடுமுறை முடிவடைந்து, பள்ளிகள் இன்று மீண்டும் திறக்கப்படுகின்றன.

பள்ளி திறக்கப்படும் முதல் நாளே, பாடப்புத்தகம், நோட்டு புத்தகம் மற்றும் சீருடைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

அனைத்து பள்ளிகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் உள்ளன.

பள்ளிகள் திறக்கப்படும் முதல்நாளான இன்றே, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

காஞ்சிபுரத்தில் ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலின் வைகாசி திருவிழாவை ஒட்டி, பொதுமக்களிடையே இயற்கை உணவு

பொருட்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கண்காட்சி நடைபெற்றது.

இதில், உடலுக்கு நலம் பயக்கும் இயற்கை உணவுகள் மற்றும் பாரம்பரிய பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சிவக்குமார் 48 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்காசி, கோயம்புத்தூர், சேலம், நீலகிரி, திண்டுக்கல் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, தென்மேற்குப் பருவமழை கேரளாவில் இன்று தொடங்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

காங்கோ நாட்டில் எபோலா நோய்த் தொற்றை கட்டுப்படுத்தும் முயற்சிகளை விட, மிக விரைவாக பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

ஈரானுடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், இறுதி ஒப்பந்தம் எட்டுவதில் இன்னும் நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<

கர்நாடகாவில் அனைத்து மாணவர்களும் பேருந்தில் கட்டணமில்லாமல் பயணிக்கலாம் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. D.K. சிவக்குமார் அறிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

மேற்குவங்க சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் அதிருப்தி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. Ritabrata Banerjee நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>>>>><<<<<<

திருச்சிராப்பள்ளி - பெங்களூரு இடையே இயக்கப்படும் அதிவிரைவு சிறப்பு ரயில் சேவை, இருமார்க்கத்திலும் இம்மாதம் 9, 16, 23 மற்றும் 30ஆம் தேதிகளில் நீட்டிக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், திருக்கழுங்குன்றம் வட்டங்களில் கோவளம் உப வடிநிலப் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் புதிய குடிநீர் தேக்கம் தொடர்பான பணிகளை அமைச்சர் திரு. ஆனந்த் ஆய்வு செய்தார்.

>>>>>>><<<<<<<

ஸ்ரீபெரும்பதூர் அருகே, தனியார் தொழிற்சாலையில் மதிய உணவு உட்கொண்டு, பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 44 பேரை அமைச்சர் திரு. தென்னரசு சந்தித்து நலம் விசாரித்தார்.

>>>>>>><<<<<<<

திருவாரூர் மாவட்டத்தில், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளில் நியாயவிலை கடை

பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா என்பது குறித்து, ஆட்சியர் திரு. மோகனசந்திரன் நேரில் ஆய்வு செய்தார்.

**>>>>>>><<<<<<**

நெல்லை மாவட்டம், சேரன்மகாதேவியில் தனியார் நிதிநிறுவனத்திற்கு அனுமதி வழங்க 10 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது செய்யப்பட்டார்.

**>>>>>>><<<<<<**

தருமபுரி மாவட்டம், பெரும்பாலை மற்றும் பாப்பாரப்பட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் கோப்புகளை ஆட்சியர் திரு. சரவணன் ஆய்வு செய்தார்.

**>>>>>>><<<<<<**

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அருகே கல்குவாரி குட்டை நீரில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

**>>>>>>><<<<<<**

கள்ளக்குறிச்சி அருகே, சென்னை - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனம் மீது, கார் மோதிய விபத்தில் 2 மாணவர்கள் உயிரிழந்தனர்.

**>>>>>>><<<<<<**

விளையாட்டுச் செய்திகள்

தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கோவாவில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 1-0 என்ற கோல்கணக்கில் பூட்டானை வென்றது.

இந்திய அணியின் சார்பில் Sanfida Nongrum கோல் அடித்தார்.

இறுதியாட்டத்தில் இந்தியா பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<<

பர்மிங்காமில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ஜப்பானின் Takeru Yuzuki இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, பிரிட்டனின் Finn Bass - Scott Duncon இணையை வென்றது.

>>>>>>>END<<<<<<<